# கர்த்தருடைய வருகை

நாம் முடிவு
காலத்தி
லிருக்கிறோம்.
ஆண்டவருடைய
வருகையைப் தவிர,
வேறெதுவும்
நிகழுப்போவதாக
எனக்குத்
தெரியவில்லை

**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

## மத்தேயு 24:32–44

அத்திமரத்தினால் ஒரு உவமையைக் கற்றுக்கொள்ளுங்கள்; அதிலே இளங்கிளை தோன்றி, துளிர்விடும்போது, வசந்தகாலம் சமீபமாயிற்று என்று அறிவீர்கள்.

அப்படியே இவைகளையெல்லாம் நீங்கள் காணும்போது, அவர் சமீபமாய் வாசலருகே வந்திருக்கிறார் என்று அறியுங்கள்.

இவைகளெல்லாம் சம்பவிக்கு முன்னே இந்தச் சந்ததி ஒழிந்துபோகாதென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை.

அந்த நாளையும் அந்த நாழிகையையும் என் பிதா ஒருவர்தவிர மற்றொருவனும் அறியான்; பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள்.

நோவாவின் காலத்தில் எப்படி நடந்ததோ, அப்படியே மனுஷகுமாரன் வரும் காலத்திலும் நடக்கும்.

எப்படியெனில், ஜலப்பிரளயத்துக்கு முன்னான காலத்திலே நோவா பேழைக்குள் பிரவேசிக்கும் நாள்வரைக்கும், ஜனங்கள் புசித்தும் குடித்தும், பெண் கொண்டும் பெண்கொடுத்தும்,

ஜலப்பிரளயம் வந்து அனைவரையும் வாரிக்கொண்டுபோகுமட்டும் உணராதிருந்தார்கள்; அப்படியே மனுஷகுமாரன் வருங்காலத்திலும் நடக்கும்.

அப்பொழுது, இரண்டுபேர் வயலில் இருப்பார்கள்; ஒருவன் ஏற்றுக்கொள்ளப்படுவான், ஒருவன் கைவிடப்படுவான்.

இரண்டு ஸ்திரீகள் ஏந்திரம் அரைத்துக்கொண்டிருப்பார்கள்; ஒருத்தி ஏற்றுக்கொள்ளப்படுவாள், ஒருத்தி கைவிடப்படுவாள்.

உங்கள் ஆண்டவர் இன்ன நாழிகையிலே வருவாரென்று நீங்கள் அறியாதிருக்கிறபடியினால் விழித்திருங்கள்.

திருடன் இன்ன ஜாமத்தில் வருவானென்று வீட்டெஜமான் அறிந்திருந்தால், அவன் விழித்திருந்து, தன் வீட்டைக் கன்னமிடவொட்டானென்று அறிவீர்கள்.

நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார்; ஆதலால், நீங்களும் ஆயத்தமாயிருங்கள்.

இதைக்குறித்து கர்த்தருடைய தீர்க்கதரிசியாகிய சகோ.பிரான்ஹாம் கூறுவதை நாம் வாசிக்கலாம்:

*கலிபோர்னியாவில் ஏற்படும் பூமியதிர்ச்சிகளைப் பாருங்கள். கர்த்தராகிய இயேசுவின் வருகைக்கு முன்பு தேவன் அந்த இடத்தை தண்ணீரில் மூழ்கச் செய்வார் என்று முன்னுரைக்கிறேன். ஹாலிவுட், லாஸ் ஏஞ்சலிஸ் போன்ற அங்குள்ள ஆபாசமான இடங்களை சர்வ வல்லமையுள்ள தேவன் தண்ணீரில் மூழ்கச் செய்வார் என்று நான் நம்புகிறேன். அவை கடலின் அடிக்குள் செல்லும். அங்கு பாவம் நிறைந்துள்ளது பாருங்கள், அது தடை.*

**இவர் யார் என்று சொல்லுகிறீர்கள்?, டிசம்பர் 27, 1964, பத்தி எண் 47**

*கர்த்தருடைய வருகை சடுதியாக இருக்குமென்று (மணவாட்டி) இரகசியமாக எடுத்துக் கொள்ளப்படுவாள் என்றும் ஞாபகமிருக்கட்டும். அவர் இரவில் திருடன் வருகிற விதமாய் வந்து அவளைக் கொண்டு செல்வார்.*

**பதறல், செப்டம்பர் 1, 1963, பத்தி எண் 55**

இயேசுவானவர், அவர் வரும்போது, அவர் ஒரு தீர்க்கதரிசியாக இருக்க வேண்டியதாயிருந்தது. அது சரி! இன்றைக்கே, இயேசுவானவர் மறுபடியும் வருவதற்கு முன்னே, இயேசு கிறிஸ்துவின் முழுமையான வெளிப்பாடானது மாம்சத்திலே வெளிப்பட வேண்டியதாயிருக்கிறது. இதை சிந்தித்துப் பார்! இயேசுவானவர் சொன்னார், "சோதோமின் நாட்களில் இருந்ததைப் போலவே, மனுஷகுமாரன் வெளிப்படுத்தப்படும் போது, மனுஷ குமாரனுடைய நாட்களிலும் இது அவ் விதமாகவே இருக்கும்" வெளிப்படுத்தப்படுவது அல்லது திறக்கப்படுவது, தெரியப்படுவது என்ன? இரகசியமானது கொண்டு வரப்பட்டு வெளிப்படுத்தப்படுகிற அந்த நாளிலே உலகமானது சோதோமின் நிலையில் இருக்கும். நாம் இதைப் பெற்றுக் கொண்டோம். இல்லையா? ஆமாம்! அதை எத்தனை பேர் விசுவாசிக்கிறீர்கள்? இது சோதோமின் நிலைமையில் இருக்கிறது. மேலும் அது சிறிதும் பிசகாமல் சரி!

*இப்போது அது எங்கே அமைகிறது என்று பாருங்கள்.*

**தற்கால நிகழ்ச்சிகள் தீர்க்கதரிசனத்தின் மூலமாய் தெளிவாக்கப்படுகின்றன, டிசம்பர் 6, 1965, பத்தி எண் 233**

*அப்படியானால் நாம் எங்கு இருக்கிறோம்? பாருங்கள்? நாம் எங்கு இருக்கிறோம்? இன்னும் ஒன்று மாத்திரமேயுள்ளது. அறுவடை இங்குள்ளது. அவள் முற்றிலும் முதிர்வடைந்து விட்டாள்,* **அவருடைய வருகைக்காக அவள் ஆயத்தமாயிருக்கிறாள்.**

**சிறந்த வேலைப்பாடு, ஜூலை 5, 1964, பத்தி எண் 167**

**ஆவியின் நிறைவைப் பெற்ற ஜனங்களே, ஏதோ ஒன்று நிகழவிருக்கின்றது என்பதை உங்களால் காணமுடியவில்லையா? உலகம் முழுவதிலும் ஒரு மகத்தான எழுப்புதல் உண்டாகும் என்று நீங்கள் எதிர்பார்க்க வேண்டாம். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வருகையைத் தவிர இனி நடக்கப் போவது வேறொன்றுமில்லை.**

**ஈஸ்டர் முத்திரை, ஏப்ரல் 10, 1965, பத்தி எண் 281**

**ஆயத்தமாகுங்கள். இந்நாட்களில் ஒன்றில் அக்கினி விழப் போகிறது.** தேவன் அவரை அனுப்பப் போகிறார். அது காண்பதற்கு சிறந்த காட்சியாயிருக்கும். **அவர் வரும்போது நீ ஆயத்தமாயிருப்பாயா? அவர் வரும்போது, அவருடன் கூட மேலே செல்ல நீ ஆயத்தமாயிருப்பாயா?** இயற்கைக்கு மேம்பட்ட மணவாட்டி இரகசியமாக எடுத்துக்கொள்ளப்படுதல் – அவள் அழிவுள்ள தன்மையிலிருந்து அழியாமைக்கு மாற்றப்படுவாள். **அவள் ஒரு நொடிப்பொழுதில், ஒரு இமைப்பொழுதில் மறுரூபமாவாள்.** கர்த்தருடைய வருகை மட்டும் உயிரோடியிருக்கும் நாம் நித்திரையடைந்தவர்களுக்கு முந்திக் கொள்வதில்லை.

**கிறிஸ்துவின் மணவாட்டியின் காணக்கூடாத இணைப்பு, நவம்பர் 25, 1965, பத்தி எண் 325**

**சபையே, அவர் இந்நாட்களில் ஒன்றில் வருவார்.** அவர் முதல் தரம் வந்தது

எவ்வளவு நிச்சயமோ, அவ்வளவு நிச்சயமாய் அவர் மறுபடியும் வருவார். **எல்லாவற்றையும் ஆயத்தப்படுத்துங்கள்.** உங்களை பதரிலிருந்து பிரித்துக்கொள்ளுங்கள். **எதிர்நோக்குதலுடன் இருங்கள்.**

**கிறிஸ்துவின் மணவாட்டியின் காணக்கூடாத இணைப்பு, நவம்பர் 25, 1965, பத்தி எண் 319**

இப்பொழுது கவனியுங்கள், அது மறுபடியும் சம்பவிக்கும் என்று இயேசு கூறினார். "சோதாமின் நாட்களில் நடந்தது போல, மனுஷகுமாரன் வருகையிலும் நடக்கும்." மறுபடியுமாக தேவனுடைய ஆவி மாமிச சரீரத்தில் இறங்கும். ஆபிரகாமிடம் சென்ற அந்த மனிதன் கன்றுக்குட்டியின் இறைச்சியைப் புசித்து மாட்டின் பாலைக் குடித்து, வெண்ணெயும் அப்பமும் தின்றார். ஆபிரகாம் அவரை 'ஏலோகிம்' என்றழைத்தான் - மாமிசத்தில் வெளிப்பட்ட தேவன். தேவன் தமது வருகைக்கு முன்பாக மறுபடியும் மாமிச சரீரத்தில் வெளிப்படுவார் என்று இயேசு

*வாக்களித்தார். அது பரிசுத்த ஆவி - தேவன் ஒருவரே - தம்மை வெளிப்படுத்தி, மறுபடியுமாக லோத்தையும் ஆபிரகாமையும் வெவ்வேறாகப் பிரிக்கிறார்.*

தேவனுடைய வார்த்தை அவிசுவாசத்தினின்று முழுவதுமாக பிரிந்து வரும்படி அழைக்கிறது, ஜனவரி 21, 1964, பத்தி எண் 73

**தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், சந்தேகப்படாதீர்கள், தைரியமாயிருங்கள், அவருடைய வருகையின் நேரம் நெருங்கிக் கொண்டிருக்கிறது.**

தேவனுடைய வார்த்தை அவிசுவாசத்தினின்று முழுவதுமாக பிரிந்து வரும்படி அழைக்கிறது, ஜனவரி 21, 1964, பத்தி எண் 196

*இந்த ஊழியம் விரைவில் முடிவுபெறும். பின்பு எதிர்நோக்கியிருக்கும் குமாரன் பிரத்தியட்சமாவார்.*

தேவனுடைய வார்த்தை அவிசுவாசத்தினின்று முழுவதுமாக பிரிந்து வரும்படி அழைக்கிறது, ஜனவரி 21, 1964, பத்தி எண் 220

*நாம் கர்த்தருடைய வருகைக்கு காத்திருக்க மட்டும் செய்ய வேண்டும். காத்திருக்க*

*மட்டும் செய்யுங்கள்;* **உங்கள் தீவட்டிகளை சுத்தம் பண்ணி வைத்திருங்கள், அதை எண்ணெயினால் முழுவதும் நிரப்புங்கள். ஒவ்வொரு மணி நேரமும் ஜெபித்துக் கொண்டிருங்கள், ஒவ்வொரு நாளும் அல்ல, ஒவ்வொரு மணி நேரமும். உங்களை ஆயத்தமாக வைத்திருங்கள்; ஆயத்தமாயிருங்கள்; இனிமையாயிருங்கள், விழித்துக் காத்திருங்கள்...**

கேள்விகளும் பதில்களும் (COD 2:19), ஆகஸ்ட் 23, 1964 காலை, பத்தி எண் 198

**தமது சபையை ஏற்றுக்கொள்ள தேவன் சீக்கிரமாய் வருகிறார். அப்பொழுது அவர் ஏற்றுக்கொள்ளத்தக்க விதமாய், நாம் அத்தகைய கிறிஸ்தவர்களாய் இருத்தல் அவசியம்** – *கோதுமையானது முதிர்வடைய வேண்டும். அது சரி.*

கிறிஸ்து தமது சொந்த வார்த்தையில் வெளிப்படுகின்றார், ஆகஸ்ட் 22, 1965 காலை, பத்தி எண் 89

*மற்ற ஒவ்வொரு காரியமும் இந்த நேரத்தை நோக்கி நகர்வதை நாங்கள்*

காண்கிறோம். வேத வாக்கியங்கள் உறுதிப்படுத்தப்பட்டு, நிரூபிக்கப் படுவதை நாங்கள் காண்கிறோம். கர்த்தாவே, நீர் வெளிப்படுத்தப்படுவதை நாங்கள் எங்கள் சொந்தக் கண்களால் அதைப் பார்ப்பது போல, ஒரு நாளிலே எடுத்துக்கொள்ளப்படுதல் நடக்கும். "மனுஷகுமாரன் மகிமையோடு மேகங்கள் மேல் தம்முடைய பரிசுத்த தூதர்களுடன் வருவார். நாமும் அவரை சந்திக்க ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுவோம்" என்ற வார்த்தையின் வெளிப்படுதலையும் நாங்கள் பார்ப்போம். அப்போது அது... இப்போது அதைக்குறித்து கேட்கிறோம். அப்போது அதை எங்களுடைய சொந்தக் கண்களால் காண்போம்.

**தேவனால் அருளப்பட்ட ஒரே ஆராதனை ஸ்தானம், நவம்பர் 28, 1965 காலை, பத்தி எண் 290**

வேறொன்றையும் கூற விரும்புகிறேன். இது இணையும் நேரம். சபைகள் இணைகின்றன, நாடுகள் இணைகின்றன... இது தேவனும் அவருடைய மணவாட்டியும்

*இணையும் நேரமும் கூட. இதை நான் பயபக்தியோடும் மரியாதையோடும் கூறுகிறேன். கிறிஸ்துவின் மணவாட்டி அழைக்கப்பட்டாள் என்று நான் விசுவாசிக்கிறேன். அவள் தேவனுடைய ராஜ்யத்தில் முத்தரிக்கப்பட்டாள் என்று நான் விசுவாசிக்கிறேன். எல்லாம் ஒன்று சேர்க்கப்பட்டு இயங்க ஆயத்தமாயுள்ளது என்று நான் விசுவாசிக்கிறேன்.*

*அவர்கள் பூமியிலிருந்து அவளை மகிமைக்குள் எடுத்துக் கொள்ளப்படுதலில் கொண்டு செல்லவிருக்கும் இயக்கும் சக்திக்காக காத்திருக்கின்றனர். அதை நான் முழு இருதயத்தோடும் விசுவாசிக்கிறேன். ஆம் ஐயா! அவர் எப்படி அதை செய்ய போகிறாரென்று நமக்கு தெரியாது, ஆனால் அவர் அதை செய்வார்.*

**கிறிஸ்து என்னப்பட்ட இயேசுவை நான் என்ன செய்ய வேண்டும்?, நவம்பர் 24, 1963, பத்தி எண் 115**

## கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அவருடைய வருகை

**சமீபமாயிருக்கிறதென்றும், அவர் வருமுன்பு நான் தரிசனமாகக் கண்ட இந்த ஏழு சம்பவங்களும் நிகழ்ந்தேறவேண்டுமென்று எனக்கு அறிவித்தார்.**

ஏழு சபை காலங்களின் வியாக்கியானம் – லவோதிக்கேயா சபையின் காலம்

**அந்த நேரம் நமது மேல் உள்ளது, இருள், காரிருள் இப்பொழுது காரிருள் ஜனங்களை மூடிக்கொண்டிருக்கிறது.** *அது தான் இது. இதன் அர்த்தம் என்ன? நாம் எங்கு அடைந்துள்ளோம்? நாம் எந்த நேரத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்? வருகைக்கு நாம் எவ்வளவு அருகாமையிலே உள்ளோம்?*

ஷாலோம், ஜனவரி 12, 1964, பத்தி எண் 88

*உங்கள் மனைவிகளுடன் சென்று சமாதானமாயிருங்கள். ஏனெனில் காலதாமதமாகி விட்டது. கர்த்தருடைய வருகை சமீபமாயுள்ளது!*

விவாகமும் விவாகரத்தும், பெப்ரவரி 21, 1965, பத்தி எண் 313

அச்சமயத்தில் தேவன், புறஜாதிகளின் மேல் பெந்தேகோஸ்தே நாளில் ஊற்றின அதே ஆவியை, இஸ்ரவேல் குடும்பத்தாரின் மேல் ஊற்றுவார். "அப்பொழுது அவர்கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிப் பார்த்து, ஒருவன் தன் ஒரே பேறானவனுக்காகப் புலம்புகிறது போல எனக்காக புலம்பி, ஒருவன் தன் தலைச்சன் பிள்ளைக்காகத் துக்கிக்கிறது போல எனக்காக மனங்கசந்து துக்கிப்பார்கள். அந்நாளிலே மெகிதோன் பட்டணத்துக்குப் பள்ளத்தாக்கின் ஊராகிய ஆதாத்ரிம்மோனின் புலம்பலைப்போல எருசலேமின் புலம்பல் பெரியதாயிருக்கும். தேசம் புலம்பிக்கொண்டிருக்கும். ஒவ்வொரு வம்சமும் தனித்தனியாகப் புலம்பும்; தாவீது குடும்பத்தார் தனியேயும், அவர்கள் ஸ்திரீகள் தனியேயும், நாத்தான் குடும்பத்தார் தனியேயும், அவர்கள் ஸ்திரீகள் தனியேயும்..." (சகரியா 12:10-12) இயேசு கிறிஸ்து மகிமையின் மேகங்களோடு வரும்போது ஒவ்வொரு குடும்பமும் தனித்தனியாகப் புலம்பும். அவரைக் குத்தின யூதர்கள் அவரை நோக்கிப் பார்ப்பார்கள்.

*அவர்கள், "என் கைகளில் இருக்கிற வடுக்கள் ஏது" என்று கேட்டால் அவர், "என் சிநேகிதரின் வீட்டிலே காயப்பட்டதினால் உண்டானவைகள்" என்பார் (சகரியா 13:6). அவரை மேசியாவாகப் புறக்கணித்த யூதர்களுக்கும், அவரை இக்காலத்து இரட்சகராகப் புறக்கணித்து எடுத்துக்கொள்ளப்படுதலில் விடப்பட்ட புறஜாதிகளுக்கும் அது துக்கத்தின் காலமாயிருக்கும்.*

**ஏழு சபை காலங்களின் வியாக்கியானம்**

*மல்கியா 4-ன் எலியா வரும்போது, அதன் பிறகு உடனடியாக - அவனுடைய செய்தி, மற்றவைகளுக்குப் பிறகு - கர்த்தருடைய வருகையும் பூமி புதுப்பிக்கப்படுதலும் உண்டாகும்.*

**கேள்விகளும் பதில்களும்** (COD 2:22), **ஆகஸ்ட் 30, 1964 மாலை, பத்தி எண் 158**

*இஸ்ரவேலரில் மீதியானவர்கள் பொதுவான உயிர்த்தெழுதல் வரைக்கும் எழுந்திருப்பதில்லை. இப்பொழுது, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின்*

வருகையின் போது, அவருடைய வருகையில் உண்மையில் பிரியம் கொண்டவர்களும் (loving) அதற்கென்று வாழ்ந்து கொண்டிருப்பவர்களும் (living) அவர் ஆகாயத்தில் தோன்றும் போது, கிறிஸ்துவுக்குள் மரித்த சபை எழுந்திருந்து ஒரு இமைப்பொழுதில் மறுரூபமாகும். மற்றவர்கள் அதைக்குறித்து ஒன்றுமே அறியமாட்டார்கள். அவர்கள் நகரத்தில் அநேகருக்குக் காணப்பட்டார்கள் என்பதை ஞாபகம் கொள்ளுங்கள் (மத் 27:53). எடுத்துக்கொள்ளப்படுதலின் போதும் அவ்வாறே சம்பவிக்கும். நாம் ஒருவரையொருவர் காண்போம், அவர்களை நாம் காண்போம். உலகத்திலுள்ள மற்றவர்கள் அவர்களைக் காணமாட்டார்கள். அது எடுத்துக்கொள்ளப்பட்டு இரகசியமாக சென்று விடும். அதன்பிறகு அந்த நாளுக்காக காத்திருந்து, அந்த மகிமையான ஆயிரம் வருட அரசாட்சிக்கு அது பூமிக்குத் திரும்ப வரும், மரணமடைந்த மற்றவர்கள் அந்த ஆயிரம் வருடம் முடியுமளவும் உயிரடையவில்லை (வெளி. 20:5). அதன்

*பிறகு பொதுவான உயிர்த்தெழுதல் உண்டாகும்.*

**நான் எப்படி ஜெயங்கொள்வது?, ஆகஸ்ட் 25, 1963, பத்தி எண் 61**

*அச்சம்பவம் நிகழ்ந்தபின், நாம் திரும்பி வந்து, வேதத்தில் மறைபொருளாயிருக்கும் பரம ரகசியங்கள் - நாம் இதுவரை அறிந்திராதவை - நமக்குத் திறக்கப்பட்டு, அவை கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வருகையுடன் பரிபூரணமாக இணைகின்றன.*

**பதறல், செப்டம்பர் 1, 1963, பத்தி எண் 53**

*கிறிஸ்துவின் முதல் வருகை இரத்தம் சிந்தி மரிப்பதற்கென மனிதனாகத் தோன்றினார். கிறிஸ்து மூன்று முறை வருகிறார். அவர் மூன்று என்னும் எண்ணிக்கையில் பரிபூரணப்படுகிறார். பாருங்கள்? ஆனால் சாத்தானின் எண்ணிக்கை நான்காகும். அவன் வருவதைக் கவனியுங்கள் - அது நான்கு.* **கிறிஸ்துவை கவனியுங்கள். முதலாவதாக, கிறிஸ்து ரத்தம் சிந்தி மரிப்பதற்கென மனிதனாகத் தோன்றினார். அது சரியா? அது அவருடைய முதலாம்**

**வருகை. எடுத்துக்கொள்ளுதலின் போது அவர் இரண்டாம் முறை வருகிறார். அப்பொழுது நாம் மறுரூபமாகி அவரை ஆகாயத்தில் சந்திப்போம். அவர் மூன்றாவது முறை வருகையில் அவர் தேவ அவதாரமாக இருக்கிறார்.** (He is the incarnate God) *ஆமென்! (சகோதரன் பிரான்ஹாம் தன் கரங்களை ஒருமுறை கொட்டுகிறார் - ஆசி) தேவன், இம்மானுவேல் பூமியை ஆளுவதற்கென வருகிறார். அது உண்மை. அவர் மூன்று முறை மட்டுமே வருகிறார்.*

**நான்காம் முத்திரை, மார்ச் 21, 1963 மாலை, பத்தி எண் 210**

*கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிடமிருந்து கிடைக்கப்பெற்ற செய்தியை இன்று நன்கறிந்த நாமனைவரும், சாயங்காலம் வெளிச்சம் ஒன்றுண்டாகும் என்பதை விசுவாசிக்கிறோம். இந்த சாயங்கால வெளிச்சம்...*

*இயேசு கிறிஸ்துவே இப்பூமியில், அல்லது வானத்தில் தோன்றி தமது*

*மணவாட்டியை எடுத்துக்கொள்ளும்போது, மகத்தான வெளிச்சம் வேறு உண்டாகும். அப்பொழுது ஆயிரம் வருட அரசாட்சி தொடங்கும்.*

**கிறிஸ்து தமது சொந்த வார்த்தையில் வெளிப்படுகின்றார், ஆகஸ்ட் 22, 1965 காலை, பத்தி எண் 148**

*எல்லாத் தீர்க்கதரிசிகளிலும் முதலாவதாக உயிர்த்தெழ வேண்டியவர் கிறிஸ்துவே. அநேக இடங்களில் அவர் சாயலாக இருந்த போதிலும், அவரே நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானவர். கடைசி நாட்களில் சபையிலிருந்து வெளியே வரும் கிறிஸ்துவின் மணவாட்டியின் மத்தியில் மீண்டும் ஒரு கதிர்க்கட்டு அசைவாட்டப்பட வேண்டும். ஓ என்னே!*

**இது சூரிய உதயம், ஏப்ரல் 18, 1965, பத்தி எண் 94**

*இந்த திராட்சை ரசத்தை அதன் நோக்கத்திற்காக பரிசுத்தப்படுத்தும், இன்றிரவு இந்த திராட்சை ரசத்தைப் பானம் பண்ணி, அந்த அப்பத்தை புசிக்கும் எவரும்,*

*அவர்களுக்கு முன் வைக்கப்பட்டுள்ள பிரயாணத்தில் செல்வதற்கு பெலனையருளும், இயேசு வரும் வரைக்கும் அவர்கள் ஆரோக்கியமுள்ள வர்களாகவும் பலமுள்ளவர்களாகவும் பரிசுத்த ஆவியினால் நிறையப்பட்டும் இருப்பார்களாக! ஆமென்.*

**பதறல், செப்டம்பர் 1, 1963, பத்தி எண் 193**

**கர்த்தாவே, இன்றைக்கு உம்முடைய ஊழியக்காரர்களாக நாங்கள் உமது வருகையைக் காண எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறோம்.**

**கேள்விகளும் பதில்களும் (COD 2:20), ஆகஸ்ட் 23, 1964 மாலை, பத்தி எண் 278**

*சில நிமிடங்களுக்கு என் பொருளை மாற்றிக்கொண்டு இன்றைக்கும் அவ்வாறேயுள்ளது என்று கூற விரும்புகிறேன்.* **ஜனங்கள் அவருடைய வருகையை ஆவலுடன் எதிர்நோக்கியிருக்கின்றனர். இறுக்கத்தை நம்மால் உணரமுடிகிறது. அவர்கள் தேடிக்கொண்டும், ஒவ்வொரு அசைவையும்,**

**அடையாளத்தையும் கவனித்துக்கொண்டும், அதை வேத வாக்கியங்களுடன் ஒப்பிட்டுப்பார்த்துக்கொண்டும் இருக்கின்றனர்.**

**மலையின் மேலுள்ள கவர்ச்சி என்ன?, ஜூலை 25, 1965, பத்தி எண் 41**

*இவை யாவும் நிகழ வேண்டுமென அவர் நியமித்துள்ளதால், அவை அங்ஙனமே நிறைவேறும். கர்த்தர் வானத்திலிருந்து இறங்கி வரும்போது, முதலாவதாக ஆரவாரம் புறப்பட்டுச் சென்றது. ஆரவாரம் என்பது ஜனங்களை ஒன்று கூட்டுவதற்கென்று அளிக்கப்படும் செய்தியாகும். இப்பொழுது தீவட்டிகளை சுத்தப்படுத்தும்* (trim) *சமயமாகும். "எழுந்து உன் தீவட்டியை சரிபடுத்து" - இது ஏழாம் ஜாமத்தில் உரைக்கப்பட்டது. ஆறாம் ஜாமத்திலல்ல. ஏழாம் ஜாமத்தில். "மணவாளன் வருகிறார், எழுந்து, உன் தீவட்டியைச் சரிபடுத்து" புத்தியுள்ள கன்னிகைகள் அதற்குக் கீழ்ப்படிந்தனர். சிலருடைய தீவட்டிகளில் எண்ணெய்*

*இல்லாமல் இருந்தது. இது தீவட்டியைச் சரிபடுத்தும் நேரம். இது மல்கியம் 4-ம் அதிகாரத்தின் நேரம்! இது லூக்கா 17-ம் அதிகாரத்தின் நேரம்! இக்காலத்திற்கென வேதம் விளம்பியுள்ள தீர்க்கதரிசனங்கள் அனைத்தும் நிறைவேறும் நேரம் இது. அது தத்ரூபமாக நிறைவேறுவதை நீங்கள் காண்கிறீர்கள்.*

**ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுதல், டிசம்பர் 4, 1965, பத்தி எண் 141**

*இது பரிசுத்த ஆவியின் ஏவுதலாக அருளப்பட்டதல்ல என்று கூற யார் துணிச்சல் கொள்ள முடியும்? அதை அவர் இங்கு முன்னுரைத்து, அரிசோனாவுக்கு அனுப்பி மறுபடியும் கொண்டு வந்து, விஞ்ஞானத்தினாலும் மற்றவைகளினாலும் அதை நிரூபித்தார். இந்த புத்தகம் ஏற்கனவே திறக்கப்பட்டு விட்டது (அது உண்மை), கிறிஸ்துவின் வருகையுடன் ஏழாம் முத்திரை அடையாளம் கண்டு கொள்ளப்படக் காத்திருக்கிறது.*

**கிறிஸ்து என்னப்பட்ட இயேசுவை நான் என்ன செய்ய வேண்டும்?, நவம்பர் 24, 1963, பத்தி எண் 182**

*இன்றிரவு அந்த ஜீவன் இங்கு பிரசன்னமாயுள்ளது. அது உண்மை. பரிசுத்த ஆவியானவர் இங்குள்ளார். அவர் ஆவியின் வடிவில் கிறிஸ்து, அவருடைய ஆவி-அபிஷேகம் - இங்குள்ளது.*

**வழி நடத்தும் தன்மை, டிசம்பர் 7, 1965, பத்தி எண் 148**

*கவனியுங்கள், வேகமாக முடிக்கிறேன். ஒரு உண்மையான வித்து வரவேண்டும். அது நடக்கவேண்டும்.* **ஏனெனில் அவர் கறை திரையற்ற மணவாட்டிக்காக வருகிறார். அவர் வார்த்தையினால் உறுதிப்படுத்தப்பட்ட மணவாட்டியாக வருகிறார். ஓ, அவள் மிகச்சிறிய கூட்டமாக இருப்பாள்.** *இயேசு, "நோவாவின் காலத்தில் நடந்தது போல, மனுஷகுமாரன் வருங்காலத்திலும் நடக்கும். அப்பொழுது எட்டுபேர் மாத்திரமே இரட்சிக்கப்பட்டார்கள்?" என்றார். அது*

சரியா? இப்பொழுது எத்தனை பேர்? எனக்குத் தெரியாது.

ஆனால் பாருங்கள், மணவாட்டி, அவரவர் காலத்தில் வார்த்தையை ஏற்றுக்கொண்ட அனைவரையும் கொண்டவளாயிருப்பாள் - இந்த கடைசி கால கூட்டம் மாத்திரமல்ல. தேவன் இவர்கள் அனைவரையும் இங்கிருந்து எடுத்துக்கொள்வார்.

அது ஆச்சரியப்படும் அளவுக்கு மிகச்சிறியதாயிருக்கும். அவர்கள் காணாமற் போவார்கள். அவர்கள் போய்விட்டார்கள் என்று நீங்கள் அறியவும் மாட்டீர்கள். இந்த கடைசி நாட்களில் அவர் ஐந்நூறு பேர்களை எடுத்துக்கொண்டால் எப்படியிருக்கும்? நீங்கள் அறியவும் கூட மாட்டீர்கள். சில நாட்களில், இரண்டு அல்லது மூன்று நாட்களில் அவர் ஐந்நூறு பேர்களை எடுத்துக்கொண்டால் எப்படியிருக்கும்? உலகில் அத்தனை பேர் காணாமற் போகின்றனர். அவர்கள் எங்கே என்று அறிவதில்லை. அவர்களைக் குறித்து ஒன்றுமே கேள்விப்படுவதில்லை. கர்த்தராகிய இயேசுவின் இரகசிய வருகையின் போதும்

*அப்படியே இருக்கும். அவள் எடுத்துக்கொள்ளப்படுவாள்.*

*மற்றவர்கள் பிரசங்கித்துக் கொண்டேயிருப்பார்கள் - நோவாவின் காலத்தில் நடத்தது போல. "தேவனுக்கு மகிமை, நாங்கள் பெற்றுக்கொண்டோம், அல்லேலூயா" என்று கூறி மரணத்துக்கென்று முத்தரிக்கப்படுவார்கள். அப்படித் தான் வேதம் கூறுகிறது. அது ஒருபோதும் தவறாது.*

அறுப்பின் நேரம், டிசம்பர் 12, 1964, பத்தி எண் 297–300

**இதை உங்களுக்கு மாத்திரம் கூறாமல், எனக்கும் சேர்த்து கூறிகிறேன். ஆயத்தப்பட முயலுங்கள். ஏனெனில் ஏதோ ஒன்றின் அருகாமையில் நாம் வந்துக்கொண்டிருக்கிறோம். நிகழ வேண்டிய ஏதோ ஒன்றிற்கு வெகு அருகாமையில் நாம் வந்திருக்கிறோம். எனவே நாம் ஆயத்தமாக விரும்புகிறோம். ஆண்டவருடைய வருகை இவ்வளவு அருகாமையில் உள்ள போது,**

**அந்த மகத்தான நேரத்திற்காக நாம் ஆயத்தப்பட விரும்புகிறோம்.**

**கிறிஸ்து தமது சொந்த வார்த்தையில் வெளிப்படுகின்றார், ஆகஸ்ட் 22, 1965 காலை, பத்தி எண் 14**

*ஓ. இயேசுவோடு கூட உன்னதங்களில் உட்கார்ந்து கொண்டு, ஆவியுடன் உரையாடி, வார்த்தையின் பேரில் உரையாடி, வரப்போகும் நன்மையான காரியங்களைக்குறித்து பேசுவதென்பதும் மிகவும் அற்புதமல்லவா? அது மிகவும் நல்லது, அதைக் குறித்து அறிய நான் மிகவும் மகிழ்ச்சி கொள்கிறேன். நீங்களும் அப்படித்தானே?* **நீங்கள் கிறிஸ்தவராயிருப்பதில் மகிழ்ச்சி கொண்டிருக்கிறீர்கள் அல்லவா? உங்கள் பாவங்கள் இரத்தத்தின் கீழ் இருப்பதற்காக நீங்கள் மகிழ்ச்சி கொண்டிருக்கிறீர்கள் அல்லவா? அவர் இந்நாட்களில் ஒன்றில் வருவார், நாம் அவருடன் சென்று விடுவோம். அப்பொழுது யோசித்துப்பாருங்கள், முதுமை பருவம் அனைத்தும் நம்மை விட்டு போய்விடும்;**

**வியாதி, துன்பம் எல்லாம் போய்விடும். அழிந்து போகக்கூடிய இந்த வாழ்க்கையே மாறி விடும்.** *ஓ, என்னே! இங்கு நின்ற அருமையான சகோதரர்களை என்னால் நினைவு கூர முடிகிறது. நான் நினைவு கூருகிறேன்... உங்களில் எத்தனை பேருக்கு ரபி லாசன் ஞாபகமுள்ளது? என்னே, ஏறக்குறைய உங்கள் எல்லாருக்குமே. அவர் தமது கைத்தடியை இங்கு மாட்டி வைப்பார், நான் அங்கு உட்கார்ந்து கொண்டிருப்பேன். அவர் அந்த சிறுபாடலைப்பாடுவார்... (ஒரு நிமிடம் டெட்டி* (Teddy)*, சகோதரனே) அந்த ராகம் எனக்கு வருகிறதா என்று பார்ப்போம். எனக்குத் தெரியவில்லை...*

**ஒரு மகிழ்ச்சிகரமான நாளை எனக்காக காத்திருக்கிறது**

**அங்கு முத்துக்கள் பதிக்கப்பட்ட வாசல்கள் விரிவாய் திறக்கும்**

**இந்த துன்பத்தின் திரையை நான் கடக்கும்போது**

**நான் மறுபுறம் இளைப்பாறுவேன்.**

**என்றாகிலும் ஒருநாள் அழிந்து போகக்கூடிய உறவினருக்கு எட்டாத தூரத்தில்**

**என்றாகிலும் ஒருநாள், அது எங்கே எப்பொழுது என்று தேவன் மாத்திரமே அறிவார்**

**அழிந்து போகக்கூடிய வாழ்க்கையின் சக்கரங்கள் சுழலாமல் நின்று போகும்போது**

**நான் சீயோன் மலையில் தங்குவதற்கு சென்று விடுவேன்.**

**பரிசுத்த ஆவியின் பேரில் கேள்விகளும் பதில்களும், டிசம்பர் 19, 1959, பத்தி எண் 216**

*இப்பொழுது ஞாபகம் கொள்ளுங்கள். "பூமிக்குரிய கூடாரமாகிய நம்முடைய வீடு அழிந்து போனாலும், நித்திய வீடு பரலோகத்திலே நமக்கு உண்டு" என்று வேதம் கூறுகின்றது (2 கொரி. 5:1) ஒரு சிறு குழந்தை தன் தாயின் வயிற்றில் உள்ள போது தன் சிறு தசைகளை முறுக்கிக் கொண்டும் திருப்பிக்கொண்டும் உள்ளது... ஆனால்... பாருங்கள்? நீங்கள் கவனிப்பீர்களானால் ஒரு ஸ்திரீ மிகவும் கெட்டவளாக இருக்கலாம். ஆனால் அவள் கர்ப்பிணியாகி, அந்த குழந்தை பிறப்பதற்கு*

சற்று முன்பு, அவளில் ஒரு விதமான அன்பு காணப்படும். அவளைச் சுற்றிலும் ஏதோ ஒன்றுள்ளது. அவள் மிகவும் இளகிய மனம் படைத்தவளாயிருக்கிறாள். ஏன்? அந்த மாமிச சரீரத்தை ஏற்றுக்கொள்ள, ஒரு சிறு தூதன் ஆவி காத்துக் கொண்டிருக்கிறது. அது பிறந்தவுடன், ஜீவ சுவாசம் அதற்குள் வருகிறது. தேவன் அதை அந்த குழந்தைக்குள் ஊதுகிறார், அது ஜீவாத்துமாவாகிறது. இந்த குழந்தை பிறக்கும் நேரத்தில், அதை ஏற்றுக்கொள்ள ஆவிக்குரிய சரீரம் ஒன்று அங்குள்ளது. இப்பொழுது, இந்த சரீரம் பூமியில் விழும்போது - குழந்தையின் சரீரம் பூமியில் விழுவது போன்று - அந்த ஆவியை தனக்குள் ஏற்றுக்கொள்ள நித்திய சரீரம் ஒன்று காத்திருக்கிறது. ஓ, எவ்வளவு பெரிய காரியம்! இப்பொழுது நாம் கிறிஸ்து இயேசுவில் இருக்கிறோம் (ஆமென்!) நாம் கிறிஸ்துவில் குழந்தைகளாக, தேவனுடைய பிள்ளைகளாக கர்த்தராகிய இயேசுவின் வருகையின் போது முழு சரீர மீட்பைப் பெற்று அவர் நம்மை அவரிடம் சேர்த்துக்

கொள்ள நாம் காத்துக் கொண்டிருக்கிறோம். அப்பொழுது அழிவுக்குரிய இந்த சரீரம் அழியாமையைத் தரித்துக்கொள்ளும்.

**இனிவரப்போகும் காரியங்கள், டிசம்பர் 5, 1965, பத்தி எண் 52**

நாம் எங்கு சென்ற போதிலும் நண்பர்களைக் காண்கிறோம். நமது நண்பர்களுக்காக நாம் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். ஆனால் இன்ப துன்பங்களிலெல்லாம் உங்களோடு ஒட்டிக் கொண்டிருக்கிற நண்பர்களைப் பற்றின காரியம் என்னவெனில், அவ்வித நண்பர்களை வேறு எந்த வகையிலும் எந்த ஒன்றோடும் ஈடு கட்ட முடியாது. மற்ற எந்தவொரு நண்பனும் எப்படியிருந்தபோதிலும், இந்த வகை நண்பனோடு ஈடுகட்ட முடியாது. நீங்கள் அவைகளுக்குள் பிழிந்தெடுக்கப்பட்டுள்ளீர்கள். நீங்கள் அவர்களுக்குள் இசைந்து ஒன்றாயிருக்கிறீர்கள். நாம் ஒருமித்து, நாட்கள் செல்லச்செல்ல கர்த்தருடைய வருகைக்காக எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

உங்களைப் பிரித்திட முடியாது. அதைப்பற்றி நினைப்பதே கடினமானது.

**இடைவெளியில் நிற்றல், ஜூன் 23, 1963, பத்தி எண் 8**

இயேசு கிறிஸ்து திரும்ப வரும்போது, உண்மையும் உத்தமுமான எல்லா லூத்தரன்களையும், ப்ரெஸ்பிடேரியன்களையும், பாப்டிஸ்டுகளையும், மெதொடிஸ்டுகளையும், மற்றும் யாரெல்லாம் ஆவியினால் மறுபடியும் பிறந்திருக்கிறார்களோ, அவர்கள் யாவரும் அவரோடு கூட எடுத்துக்கொள்ளப்படுவார்கள். நான் அதை விசுவாசிக்கிறேன். நமது சில பெந்தேகோஸ்தே சகோதரர்கள், கடைசிக்காலத்தில் எடுத்துக்கொள்ளப் படவிருக்கும் மக்கள் தாம் சபையின் மீதியானவர்கள் என விசுவாசிக்கிறார்கள்; அவர்களின் அக்கருத்திற்கு மாறுப்பட்ட கருத்து உள்ளவனாக நான் இருக்கிறேன். தேவன் எவ்வாறு? - தேவன் எவ்வாறு இவ்வண்ணம் செய்ய முடியும்? என்று நாம் கூறமுடியாது. அவர் தமக்கு

*விருப்பமானதைச் செய்வார்). தேவன் லூத்தருக்கு "விசுவாசத்தினால் நீதிமானாகுதலை"யே வாக்குரைத்தார். அது தான் அவர்களுக்கு தெரியும். பார்த்தீர்களா? அதை அவர் ஆதரிக்கிறார் என்று தேவனுடைய கிருபையினாலும் வேதவாக்கியங்களை ஆதாரமாகக் கொண்டும் நான் விசுவாசிக்கிறேன். சபையை எடுத்துக்கொள்வதாக அவர் லூத்தருக்கும் வாக்குரைத்திருக்கிறாரே! ஆண்டவர் முதலாம் ஜாமத்தில் வரவில்லை; அவர்கள் நித்திரை அடைந்தார்கள். பிறகு இரண்டாம் ஜாமம் தொடங்கி ஆறு ஜாமம் வரையும் அவர் வரவில்லை. கடைசியாக ஏழாம் ஜாமத்தில் அவர் வருகிறார். அதுவே ஏழாம் சபையின் காலமாயிருக்கிறது, அதுவே ஏழாம் தூதனின் செய்தியிருக்கிறது. அவர் வந்தபொழுது, கன்னிகையர் யாவரும் தங்களுடைய விளக்குகளை ஆயத்தப்படுத்தினார்கள். தேவனுடைய ஆவியினால் பிறந்தவன் எவனும், அவன் ப்ரெஸ்பிடேரியன், லுத்தரன், பாப்டிஸ்டு இதில் யாராயிருந்தாலும்*

*எடுத்துக்கொள்ளப்படுதலில் போய்விடுவான். அவ்வேளையில் மணவாட்டி வெளியே அழைக்கப்படுவாள் என்று நான் விசுவாசிக்கிறேன்.* **கடைசி நாட்களில், மரணத்தை ருசி பாராமல், ஒரு ஷணத்தில் ஓரிமைப்பொழுதில் மறுரூபமாகும் சிலர் இருப்பார்கள் என்று நான் விசுவாசிக்கிறேன்.**

**இடைவெளியில் நிற்றல், ஜூன் 23, 1963, பத்தி எண் 78**

**ஆண்டவரின் வருகையைத் தவிர வேறு எதிர்காலம் நமக்கில்லை.**

**அவருடைய வருகையின் அடையாளமாக பிரகாசிக்கும் சிகப்பு விளக்கு, ஜூன் 23, 1963, பத்தி எண் 77**

*இக்கடைசி நாட்களில் அவர் செய்யப்போவதாக வாக்களித்துள்ள வெவ்வேறு காரியங்களைக் குறித்து நாம் எவ்வளவோ பேசமுடியும். அவை நமக்கு முன்னால் நிறைவேறுவதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். அதுவுமில்லாமல், வேறொரு சிகப்பு விளக்கு வெளிச்சம் வீசுவதை இன்றிரவு நாம் காண்கிறோம் -*

பெண்களின் நடத்தையும் அவர்கள் செய்யும் காரியங்களும். எல்லாமே அவருடைய வருகையின் அடையாளங்களாயுள்ளன. எல்லா மைல் கல்லும், திசைக்காட்டும் கருவியும், காந்த ஊசியும் அவருடைய வருகையையே சுட்டிக் காண்பிக்கின்றன.

**நாம் முடிவு காலத்திலிருக்கிறோம். ஆண்டவருடைய வருகையைப் தவிர, வேறெதுவும் நிகழப்போவதாக எனக்குத் தெரியவில்லை.**

அவருடைய வருகையின் அடையாளமாக பிரகாசிக்கும் சிகப்பு விளக்கு, ஜூன் 23, 1963, பத்தி எண் 161–162

இந்த செய்தியைக் கொண்டு செல்ல தேவன் நமக்கு அளித்துள்ள பொறுப்பு... எனக்கு வயதாகிக்கொண்டே போய், என் நாட்கள் குறுகுகின்றன என்று நான் நினைக்கும் போதெல்லாம், என் பொறுப்பை நான் அதிகமாக உணருகிறேன் - வேகமாக செய்ய வேண்டும். நாம் நிச்சயம் அப்படி செய்ய வேண்டும். **நாம் எல்லாவிடங்களுக்கும் சென்று இச்செய்தியை**

**அறிவித்து, இயேசு கிறிஸ்து வரப்போகின்றார் என்றும், அவரே தேவனென்றும், அவர் விரைவில் வரப்போகின்றார் என்றும், கர்த்தருடைய வருகையைத் தவிர இவ்வுலகிற்கு வேறு நம்பிக்கையே கிடையாது என்பதை மக்களுக்கு அறிவிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம்.**

கர்த்தருடைய சமூகத்தினின்று விலகி ஓடிப்போகும் ஒரு மனிதன், பிப்ரவரி 17, 1965, பத்தி எண் 80

*நான், "ஆம், ஐயா! அது தான் இது" என்றேன். பாருங்கள்? அதற்கு இரண்டு நாட்களுக்குப் பின்பு, அலாஸ்கா கிட்டத்தட்ட மூழ்கி விட்டது. மேற்கு கரை முழுவதிலும் இடிகளும், கீழே தள்ளுதல்களும் உண்டாகிக் கொண்டிருக்கின்றன. இந்நாட்களில் ஒன்றில், அவள் சரிந்து சமுத்திரத்தில் மூழ்கி போய்விடுவாள். அது உண்மை! அது என்ன?* **நாம் கர்த்தர் வரப்போகும் நேரத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.**

கர்த்தருடைய சமூகத்தினின்று விலகி ஓடிப்போகும் ஒரு மனிதன், பெப்ருவரி 17, 1965, பத்தி எண் 90

*தேவன் அந்த கப்பலில் இருந்தார் என்பதை ஞாபகம் கொள்ளுங்கள். தேவன் அந்த புயலில் இருந்தார். தேவன் அந்த மீனில் இருந்தார். யோனா திரும்பின இடத்தில் எல்லாம் தேவன் இருந்தார். பாருங்கள்? தேவன் அங்கிருந்தார். அவர் உங்களைச் சுற்றிக் கொண்டேயிருப்பார். ஆகவே நாம் இன்னும் ஏன் தாமதிக்க வேண்டும்? நாம் உடனடியாக இந்த எழுப்புதலைத் தொடங்குவோம். அது உண்மை. நீங்கள் எதற்காக காத்திருக்கிறீர்கள்?* **கர்த்தருடைய வருகை சமீபமாயுள்ளது என்று நாம் விசுவாசிக்கிறோம். அவர் ஒரு மணவாட்டியைப் பெற்றுக்கொள்வார்.** *அது ஆயத்தமாயுள்ளது. நமக்கு தர்ஷீசுக்குப் போகும் கப்பல்கள் எதுவும் வேண்டாம். நாம் நினிவேக்கு செல்கிறோம். நாம் மகிமைக்குச் செல்கிறோம். ஆமென்! அது உண்மை. தேவன் ஆசீர்வதிக்கப் போகும் இடத்திற்கு நாம் செல்கிறோம். அதை தான் நாம் செய்ய விரும்புகிறோம்.*

**கர்த்தருடைய சமூகத்தினின்று விலகிப் ஓடிப்போகும் ஒரு மனிதன், பெப்ருவரி 17, 1965, பத்தி எண் 127**

*பிறகு தேவன் பில்லி கிரகாம் பிரசங்கிக்கும் அந்த செய்தியை உறுதிப்படுத்துகிறார். ஓரல் ராபர்ட்ஸ் ஏறெடுக்கும் ஜெபங்களின் மூலம் தேவன் பிணியாளிகளை குணமாக்குகிறார். இயேசு செய்த அதே காரியங்களையே தேவன் இக்காலத்தில் செய்து... இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார் என்பதை நிரூபிக்கிறார். அது அவைகளை அழைத்துக் கொண்டிருக்கிறது. இவை இந்நேரத்தின் செய்திகளாகும். இச்செய்திகள் ஒவ்வொன்றும் "மனந்திரும்பு. இல்லையேல், அழிந்து போ" என்று அழைத்துக் கொண்டிருக்கின்றன. அது உண்மை. "மனந்திரும்பு, இல்லையேல் அழிந்து போ." நம்பிக்கை எதுவுமில்லை, அது போய்விட்டது.* **அவருடைய வருகையைக் குறித்து உலகம் எச்சரிக்கப்படுகின்றது. இச்செய்திகள் ஒவ்வொன்றும் கர்த்தராகிய இயேசு**

**வருகிறார் என்று சபை ஸ்தாபனங்களையும்... எச்சரிக்கின்றன.**

**தேவன் ஒரு மனிதனை முதலில் எச்சரிக்காமல் அவனை நியாயத்தீர்ப்புக்குள் கொண்டு வருவதில்லை, ஜூலை 24, 1963, பத்தி எண் 59**

*கர்த்தாவே, நாங்கள் இக்காலத்தில் அறிந்து கொள்ள வேண்டுமென்று நியமிக்கப்பட்டுள்ள எல்லா மகத்தான இரகசியங்களும் எங்களுக்காக திரை நீக்கப்பட்டு அளிக்கப்பட்டு, தேவனுடைய தெளிவுத் தன்மையை நாங்கள் காணவும், நாங்கள் எவ்விதமாக நடந்து கொள்ள வேண்டுமென்பதை அறிந்து கொள்ளவும், எங்களை நாங்கள் திருத்திக்கொண்டு, எங்கள் சரீரத்தின் உறுப்புகளை வார்த்தையின் ஒழுங்குக்குள் கொண்டு வரவும், கர்த்தராகிய இயேசு வரப்போகும் நாள் சமீபமாயிருக்கும் இந்நாளில் நாங்கள் எவ்வாறு வாழவேண்டும் என்பதை அறிந்து கொள்ளும்படியும் செய்யும்.*

**கர்த்தருடைய சமூகத்தினின்று விலகி ஓடிப்போகும் ஒரு மனிதன், பெப்ருவரி 17, 1965, பத்தி எண் 40**

*ஆகவே பிறகு அவர், "மூன்றாம் இழுப்பு வரப்போகின்றது. அதை விவரிக்க முயலவேண்டாம்" என்றார். இன்றிரவு அதை நான் எவ்விதம் அணுகினேன் என்று பார்த்தீர்களா? எனக்குத் தெரியவில்லை. ஆனால் இதைக்குறித்து என் சபைக்கு சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். அது என்னவென்று நீங்களே தீர்மானம் செய்துகொள்ளுங்கள்.*

*இப்பொழுது, கிறிஸ்துவை கொண்டு வருகின்ற சபைக்கு வல்லமையைக் கொணர்கின்ற திறக்கப்படப்போகின்ற அந்த இரகசியமாக இது இருக்குமா? பாருங்கள்?*

**ஐயா, இது தான் முடிவின் அடையாளமா?, டிசம்பர் 30, 1962, பத்தி எண் 394–395**

**சபையும் அவ்வாறே வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட குமாரனை எதிர்நோக்கியுள்ளது. இந்த ஊழியத்தின் நாட்களுக்கு பிறகு அவர் வருவார். அவர்**

**வானங்களில் வெளிப்படுவார், இதை நாம் மிகவும் தெளிவாகக் காண்கிறோம்.**

நான் கேள்விப்பட்டேன் இப்பொழுதோ காண்கிறேன், நவம்பர் 27, 1965 மாலை, பத்தி எண் 113

**அவர் வருவதற்குச் சற்றுமுன்பு நடக்கும் என்று அவர் சொன்ன எல்லா அடையாளங்களும் இப்போது நிறைவேறுவதை நாங்கள் காண்கிறோம். மகிழ்ச்சியோடு அந்த வேளைக்காகப் பார்த்திருக்கிறோம்.** *முற்காலத்தில் ஆபிரகாம் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட குமாரனுக்காகப் பார்த்திருந்து, தேவனுடைய கடைசி அடையாளங்கள் பூமியின் மேல் வந்திறங்குவதைக் கண்டு, குமாரன் வந்து சேர அதிக நாளாகாது என்று அறிந்துகொண்டது போல, இப்போது அது மறுபடியும் நிகழ்ந்தேறுவதைக் காண்கிறோம்.* **காலங்களின் தத்தளிப்பும், பூமியின் மேலுள்ள ஜனங்களின் இடுக்கணும், பல இடங்களில் பூமி அதிச்சிகளும், சமுத்திரம் முழக்கமாயிருப்பதும், மனுஷருடைய இருதயம் பயத்தினால்**

**சோர்ந்து போவதும் ஆகிய இந்தக் காரியங்கள் சம்பவிக்கத் தொடங்கும்போது எங்கள் மீட்பு சமீபமாயிருப்பதால் எங்கள் தலைகளை உயர்த்த இயேசு சொன்னார்.**

தேவ சித்தத்திற்குப் புறம்பாக அவருக்கொரு சேவை செய்தல், ஜூலை 18, 1965, பத்தி எண் 2

*ஞாபகமிருக்கட்டும், சோதோம் எரிந்தது. அது சரிதானா? நல்லது. இந்த உலகமும் எரிய இருக்கிறது. சோதோம் கொமோராவைப் போலிருக்கும் நாட்களில் மனுஷகுமாரன் வெளிப்படுவார் என்று லூக்கா 17-ம் அதிகாரம் 30-வது வசனத்தில் கூறப்பட்டுள்ள அந்த நேரத்தில் அது எரியும். பிறகு என்ன சம்பவிக்கும்? மல்கியாவின் தீர்க்கதரிசனப்படி அவர் பூமியை மறுபடியும் எரிப்பார். நீதிமான்களோ கிறிஸ்துவின் ஆயிர வருஷ அரசாட்சியின் போது துன்மார்க்கரின் சாம்பலின் மீது நடக்கிறவர்களாக வருவார்கள். அது சரியா; பாருங்கள்?* **ஆகவே நாம் சரியாக கடைசிகாலத்தில் ஜீவிக்கிறோம். நாம் வாசலருகே உட்கார்ந்து கொண்டு இப்போது அவர் வரக் காத்திருக்கிறோம்.**

**தேவ சித்தத்திற்குப் புறம்பாக அவருக்கொரு சேவை செய்தல், ஜூலை 18, 1965, பத்தி எண் 172**

*தேவனே, உமக்கு முன்பாக நாங்கள் எப்போதும் தாழ்மையுடன் நடக்க அருள்புரிய வேண்டுகிறேன். இன்னும் எவ்வளவு காலமாகும் என்பதை அறியாதவர்களாயிருக்கிறோம். எவ்வளவு காலமாகும் என்பதை அறியவும் நாங்கள் விரும்பவில்லை.* **தேவரீர் எப்போது வருவீர் என்பதை அறிந்து கொள்வது எங்கள் சித்தமல்ல, தேவரீர் வரும்வரை தாழ்மையுடனிருப்பதும், கர்த்தாவே, உம்முடன் நடைபோடுவதும் எங்கள் சித்தமாயிருக்கிறது.**

**தேவ சித்தத்திற்குப் புறம்பாக அவருக்கொரு சேவை செய்தல், ஜூலை 18, 1965, பத்தி எண் 194**

*நீங்கள் ஆயத்தமாயிருக்கிறீர்களா? வேதாமகத்தின் கடைசி புத்தமாகிய வெளிப்படுத்தின விசேஷம், அவன் கடைசி நாட்களில் புறஜாதி சபைக்கு திரும்ப வருவதைக் குறித்து நமக்குக் காண்பிக்கிறது - ஒரு அடையாளம். அவர்கள் எவ்வளாக*

*அதை காணத் தவறுகின்றனர். கர்த்தருடைய பெரிதான இரண்டாம் வருகைக்கு முன்பு அவன் மறுபடியும் வருவான் என்று தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டுள்ளது. அவன் கடைசி நாட்களில் இங்கிருப்பான் என்று மல்கியர் 4-ம் அதிகாரமும் வெளிப்படுத்தல் 3-ம் அதிகாரமும் நமக்கு உரைக்கின்றன. அவன் தேவன் தனக்கு கொடுத்த அந்த சிறு மந்தைக்காக வாயிலில் நிற்பான். அவன் கடைசி நாட்களில் வருவான். தேவன் அவ்வாறு கூறியுள்ளார். புறஜாதி தேசத்துக்கு இனி காலம் செல்லாது என்பதற்கு அவன் அடையாளமாயிருப்பான்.*

*ஞாபகம் கொள்ளுங்கள், அவன் காட்சியில் தோன்றும் போது, காலம் சமீபமாயிருக்கும்.*

**கண்டும் காணாதது போல் விடப்படுகிற ஒரு உண்மையான அடையாளம், நவம்பர் 12, 1961, பத்தி எண் 180–181**

*நாம் கடைசி காலத்தின் முடிவிலிருக்கிற படியால், அவர் சீக்கிரமாய் வரப்போகிறார் என்பதை அறிவோம். அவர் வருகையை*

அறிவிப்பதோடு அவர் நின்றுவிடாமல், “ஒருவனும் உன் கிரீடத்தை எடுத்துக்கொள்ளாதபடிக்கு உனக்குள்ளதைப் பற்றிக் கொண்டிரு” என்று கூறுகிறார்.

இயேசு வரும்போது, அவருக்குள் மரித்தவர்கள் உயிரோடெழுந்து, அவருடைய வருகைக்காக காத்திருப்பவர்களோடு எடுத்துக்கொள்ளப்படுவர். இந்தத் தேவனுடைய பிள்ளைகளுக்கு, அவரோடு அரசாளும் உரிமையைப் பெற்றதன் அறிகுறியாக கிரீடங்கள் கொடுக்கப்படும். இவ்வுலகத்தில் அவரோடு பொறுமையோடு பாடனுபவித்தவரனைவருக்கும், தேவன் இந்த வாக்குத்தத்தைக் கொடுத்தார். **அவருக்கென்று சகலத்தையும் விட்டு, பூரணமாகத் தங்களைச் சமர்ப்பித்தவர் எல்லாரும் அவரோடு கூட சிங்காசனத்தில் உட்கார்ந்து, அவருடைய மகத்தான ராஜ்யத்தை ஆளுமுரிமையைப் பெறுவர்.**



அதன் காரணமாகவே, ஜீவபுஸ்தகத்தில் முன்குறிக்கப்பட்ட மணவாட்டியானவள்

*அழைக்கபடும் போது, வானத்திலிருந்து ஓர் சத்தம் பிறந்து, அது மணவாட்டிக்குள் பரிசுத்த ஆவி அபிஷேகத்தை அபரிமிதமாக நிரப்பி, பூமியிலிருந்து அவள் எடுக்கப்படுவதற்கேற்ற கிருபையையுண்டாக்கும் என்று நான் விசுவாசிக்கிறேன். தேவன் அதை வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். விஞ்ஞானமும் விண்வெளி வீரர்களும் அநேக கோடி மைல்கள் தூரம் விண்வெளியில் சென்று ஆராய்ந்து பரலோகம் என்ற ஒன்று இல்லையென்று கூறி உறுதிப்பத்திரமாக வெளியிட்டாலும், அதை குறித்து எனக்கு எந்தவித கவலையுமில்லை.* **பரலோகம் என்று ஒன்றுண்டு. அங்கே உண்மைத்துவமாக இயேசு கிறிஸ்து என்பவரும் உண்டு.** *அவர் அங்கிருந்து ஒரு சரீரத்தில் தம்முடைய மணவாட்டியாகிய சபையை பெற்றுக்கொள்ள வருவார்! எவ்வளவு பழையக் கதையாக அது தோன்றினாலும் அது ஒரு காரியமல்ல, ஏனெனில் அதை தேவன் கூறினதினால் அது*

*சத்தியமாயிருக்கிறது. அதைத்தான் விசுவாசிகள் விசுவாசிக்கின்றனர்.*

**மூவகை விசுவாசிகள், நவம்பர் 24, 1963, பத்தி எண் 97**

*நாம் எதற்காக இங்கு வருகிறோம்? நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம்? விளையாடவா இங்கு வருகிறோம்? ஒரு விடுதியில் சந்திப்பது போலவோ இங்கு நாம் வருகிறோம்? சபை முழுவதும் சரியாயிருக்கும் வரைக்கும் கிறிஸ்து வரமுடியாது. அவர் நமக்காக காத்துக்கொண்டிருக்கிறார். நாம் முடிவில் வந்து விட்டோம் என்று நம்புகிறேன்.*

**இதை அறியாமலிருக்கிறாய், ஆகஸ்டு 15, 1965, பத்தி எண் 283**

*அடுத்ததாக நிகழவிருப்பது; எல்லாமே அந்த இயேசு கிறிஸ்து என்ற ஒரு நபருக்குள் ஒன்று கூடுகின்றன. கர்த்தராகிய இயேசு சரீரத்தில் திரும்ப வரும் போது மணவாட்டியாகிய சரீரம் அவரில் ஒன்று சேருகின்றது. அது அவருடைய வருகையை மூன்று முறைகளாகச் செய்கின்றது -*

இப்பூமியில் அவர் கொணரப்பட்டு, கொல்லப்பட்டு - அதாவது சிலுவையிலறைப்பட்டு, உயிரேடெழுப்பப்பட்டு, மீண்டும் தமது சரீரமாகிய மணவாட்டியில் - ஸ்திரீயில் - வெளிப்படுத்துகின்றார். உங்களுக்குப் புரிகின்றதா? அவள் அவருடைய சரீத்தின் பாகமாக இருக்கிறாள்.

ஸ்திரீயும் மனிதனும் ஒருவருக்கொருவர் மிக அருகாமையில் வந்து, ஏறக்குறைய ஒருவராகவே ஆகிவிடுகின்றனர் - எப்படியாயினும், அவர்கள் அவ்வாறே ஆகவேண்டும். அவர்கள் அவ்வளவே இருக்கின்றனர். பாருங்கள்? அவர்கள் அப்படியே அதை வெளிப்படுத்துகின்றனர். அவள் அவருடைய பாகமாக இருக்கிறாள். ஏனெனில் அவள் அவரினின்று எடுக்கப்பட்டாள்.

இன்றுள்ள மணவாட்டி கிறிஸ்துவின் சரீரத்திலிருந்து வெளியே எடுக்கப்பட்டு, இந்த நாளில் அவள் என்ன செய்வாளென்று அவர் கூறினாரோ, அதேவிதமாக அவள் கிரியை செய்துகொண்டு வருகிறாள் -

*மணவாட்டி, ராணி. ராஜாவும் ராணியும். அது சரி.*

**கிறிஸ்து தமது சொந்த வார்த்தையில் வெளிப்படுகின்றார், ஆகஸ்ட் 22, 1965 காலை, பத்தி எண் 142**

அவளைக் கேட்டவுடனே, வேகமாக அவள் மனதில் தீர்மானித்தாள். அவள், "நான் போகிறேன்" என்றாள். அவள் ஒட்டகத்தின் மேலேறி ஈசாக்கைச் சந்திக்க புறப்பட்டுச் சென்றாள்... பாருங்கள், அவள் தண்ணீர் வார்த்த அதே ஒட்டகம் அவளை தன் மணவாளனிடம் கொண்டு சென்று, அவளுடைய வெற்றி அனைத்துக்கும் காரணமாயிருந்தது. அவ்வாறே நாம் தண்ணீர் வார்த்து துதியை ஏறெடுக்கும் *(ஆமென்! பாருங்கள்?)* அதே ஒட்டகம், அதே வல்லமை தான் (வேதத்தில் மிருகம் வல்லமைக்கு எடுத்துக்காட்டாய் உள்ளது) தண்ணீர் ஜீவனைக் குறிக்கிறது, துதி வார்த்தைக்கு ஏறெடுக்கப்படுகிறது - நாம் மணவாளனைச் சந்திக்க நம்மை மகிமையின் தேசத்துக்கு கொண்டு செல்கிறது. ஆம், ஐயா! *ஆமென்!*

**அந்த மகிழ்ச்சியான ஆயிரம் வருட அரசாட்சி நாள் வரக் காத்திருக்கிறோம்.**

**அப்பொழுது ஆசீர்வதிக்கப்பட்ட நமது கர்த்தர் வந்து,**

**காத்திருக்கும் தம் மண்வாட்டியை எடுத்துச் செல்வார்.**

*இதை ஞாபகம் கொள்ளுங்கள். ஈசாக்கு தன் கூடாரத்தை விட்டுப் புறப்பட்டு வந்து பிற்பகலில் வயலில் தியானித்துக் கொண்டிருந்தான். (ஆமென்!) ரெபேக்காள் வருவதை அவன் கண்டபோது... அவள் அவனை கண்டதில்லை, அவனும் அவளைக் கண்டதில்லை, அது முதற்பார்வையிலே அன்பு. அவள் அவன் மேல் அன்பு கொண்டாள், அவனும் அவள் மேல் அன்பு கொண்டான், அவள் திரையிட்டு முகத்தை மறைத்திருந்தாள். ஆமென்! ஓ, என்னே!*

*கவனியுங்கள், அவள் அவனைக் கண்டபோது, அவள் இருதயம் மகிழ்ச்சியினால் பொங்கினது. அவள் யாரை விவாகம் செய்து கொள்ளப் போகிறாள் என்று அறிந்திருக்கவேயில்லை. ஆனால்*

*விசுவாசத்தில் புறப்பட்டுச் சென்றாள். ஆமென்! அவன் அவளை வீட்டுக்கு அழைத்துச்சென்று விவாகம் செய்து கொண்டு, தன் தகப்பனுக்கிருந்த சார்வத்துக்கும் சுதந்திரவாளியானான். ஆமென்! ஓ, பரிபூரணமாயுள்ளது, மிகவும் பரிபூரணமாயுள்ளது. சரி.*

**கேள்விகளும் பதில்களும்** (COD 2:21)
**ஆகஸ்ட் 30, 1964 காலை, பத்தி எண் 255–257**

**இந்த வாழ்க்கை எல்லாவிதமான பொல்லாப்பினாலும் நிறைந்துள்ளது என்று நாம் காண்கிறோம்; வரப்போகும் வாழ்க்கையில் அது இராது.** *இந்த வாழ்க்கை இச்சை, வியாதி, மரணம் ஆகியவைகளைக் கொண்டுள்ளது. ஏன் அப்படி? அவர் ஆயத்தம் பண்ணச்சென்ற வீடு இதுவல்ல. இது கிருமிகள் நிறைந்த வீடு* (Pest House) *எத்தனை பேருக்கு அது சம்பந்தப்பட்ட வீடென்று தெரியும்? நிச்சயமாக. நல்லது, அதில்தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். கிருமிகள் நிறைந்து வீட்டில்தான் வியாதியுள்ளவர்களை*

வைக்கின்றனர். நல்லது, அதை தான் பாவம் நமக்கு செய்துள்ளது. அது நம்மை பூமிக்குரிய கிருமிகள் நிறைந்த வீட்டில் வைத்துள்ளது. வேறு யாரும் அந்த வீட்டுக்குள் செல்ல அனுமதி கிடையாது. ஏனெனில் அது எல்லாவிதமான கிருமிகளால் நிறைந்துள்ளது. அதற்குள் செல்பவர் கிருமிகளால் பீடிக்கப்பட்டு வியாதிப்படுவார்கள். பாவம் நம்மை பிசாசின் கிருமிகள் நிறைந்த வீட்டில் கொண்டு வந்துள்ளது.

ஓ, மற்றைய வீடு பிதாவின் வீடு என்றழைக்கப்படுகின்றது. "ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்போகிறேன். நான் மறுபடியும் வந்து உங்களை கிருமிகள் நிறைந்த இந்த வீட்டிலிருந்து வெளியே கொண்டு வந்து, என் பிதாவின் வீட்டில் உங்களைக் கொண்டு செல்வேன்." ஆமென்! பார்த்தீர்களா இந்த பழைய, பூமிக்குரிய கிருமிகள் நிறைந்த வீட்டிலிருந்து என்னை வெளியே கொண்டு வாரும். அவர் ஒரு ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணச் சென்றிருக்கிறார். அங்கு பொல்லாங்கு கிடையாது. வியாதி கிடையாது, வயோதிபம்

*கிடையாது, மரணம் கிடையாது. அது பரிபூரண ஸ்தலமாக அமைந்து, உங்களை அந்த பரிபூரணத்துக்கு அழைக்கிறது. அங்கு அடைவதற்கு, நீங்கள் சற்குணராய் இருக்கவேண்டும். வேதம் அவ்வாறு கூறியுள்ளது. "ஆகையால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறது போல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள்" (மத். 5:48), அது பரிபூரண ராஜ்யம். எனவே பூரண சற்குணர் மாத்திரமே அங்கு அடையமுடியும். ஏனெனில் நீங்கள் பூரண சற்குணரான தேவனுடைய குமாரனை விவாகம் செய்ய வேண்டியவர்களாயிருக்கிறீர்கள். எனவே நீங்கள் பூரண சற்குண மணவாட்டியாயிருக்கவேண்டும். எனவே பரிபூரண வார்த்தையைத் தவிர வேறெதனால் அந்த நிலையை நீங்கள் அடைய முடியும்? இந்த வார்த்தை தான் தீட்டுக்கழிக்கும் தண்ணீர் (எண். 31:23). அதுவே நம்மை பாவங்களற கத்தரிக்கின்றது (எபே. 5:26). ஆமென்! அது உண்மை. இயேசு கிறிஸ்துவின் இரத்தம்! அதை சிந்தித்துப்*

பாருங்கள்! சொட்டு சொட்டாக ஒழுகும் இரத்த வார்த்தை! ஆமென்! இரத்தம் - தேவனுடைய வார்த்தை மணவாட்டியைச் கழுவுதற்கென இரத்தத்தை ஒழுகச் செய்கின்றது. ஆமென்! ஆம், ஐயா! அவள் பரிபூரணமான, கலப்படமற்ற மணவாட்டியாக நிற்கிறாள். அவள் அந்த கண்ணிக்குள் அகப்பட்டுக் கொண்டாள். பாருங்கள்? அவர் ஆயத்தம் பண்ணச் சென்ற பிதாவின் வீடு அங்குள்ளது.

**இனி வரப்போகும் காரியங்கள், டிசம்பர் 5, 1965, பத்தி எண் 61–62**

இது இரட்சிப்பின் நாளென்று நாமறிவோம். இந்நாளில் தேவன் மனிதனை உலகத்திலிருந்து அழைத்து, பாவமான வாழ்க்கையிலிருந்து அவரை சேவிக்கும் வாழ்க்கைக்கு அழைக்கிறார். தேவன் உயரத்திலிருந்து தமது ஆவியை ஊற்றி, இந்நாளின் ஊழியத்தின் மகத்தான அற்புதங்களும் அடையாளங்களும் நடக்கும்படி செய்கிறார். இது முன் மாரியும் பின்மாரியும் ஒன்றாக விழும் நேரமாகும். மகத்தான அடையாளங்களும் அற்புதங்களும்

*இந்நாளில் நிகழ வேண்டுமென்றும் அதை ஸ்தாபனங்கள் புறக்கணிக்குமென்றும் நாம் அறிந்திருக்கிறோம். ஆனால் நான் உள்ளே செல்ல இந்த திறந்த வாசல்கள் இன்றும் உள்ளதற்காகவும் இங்குள்ள உங்கள் போதகரைப் போன்ற இளைஞருக்கு அது அளிக்கும் உற்சாகத்துக்காகவும் நான் தேவனுக்கு நன்றியுள்ளவனாயிருக்கிறேன்...* **எனக்கு வயதாகிக் கொண்டே போகின்றது. என் நாட்கள் எண்ணப்பட்டுள்ளன என்று அறிவேன். என் சந்ததியில் அவர் வராமல் போனால், இந்த இளைஞர்கள் இந்த செய்தியை கர்த்தருடைய வருகை மட்டும் கொண்டு செல்லலாம்...** *அவரை நான் காண்பேன் என்று நம்புகிறேன்...* **அவருக்காக நான் ஒவ்வொரு நாளும் விழிப்புடன் காத்திருந்து, அந்த நேரத்துக்காக என்னை ஆயத்தமாக வைத்துக் கொண்டிருக்கிறேன்.**

இனி வரப்போகும் காரியங்கள், டிசம்பர் 5, 1965, பத்தி எண் 14

*இப்பொழுது, அவருடைய பரிபூரண ஊழியம், ஏதோ ஒரு மனிதன் அல்ல, ஏதோ*

*ஸ்தாபனம் அல்ல (அந்த காலத்தில் அவர்கள் செய்துகொண்டு வந்தது போல), ஆனால் அவரே வெளிப்படுபவராய் தம்மை வெளிப்படுத்தி லூக்கா 17:28, மல்கியா 4, எபி 13:8 போன்ற வாக்குத்தத்தங்கள் உண்மையென காண்பிக்கிறார். அப்படி அவர் செய்யும் நேரம் எந்த நேரமாக இருக்க வேண்டும்? ஆபிரகாமின் ராஜரீக சந்ததி வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட குமாரனை எதிர்நோக்கியிருக்கும் நேரம். எல்லா முன்னடையாளங்களும் நிறைவேற வேண்டியதாயுள்ளது. அழிவுக்கு முன்பு தேவனே மானிட உருவில் ஆபிரகாமின் மாம்ச சந்ததிக்கு தரிசனமானார். வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட குமாரன் திரும்ப வருவதற்கு முன்பு இதே காரியம் இந்த ராஜரீக சந்ததிக்கு சம்பவிக்கும் என்று இயேசு கூறியுள்ளார்.*

**தேவன் திரைநீக்கப்படுதல், ஜூன் 14, 1964, பத்தி எண் 322**

*என்னே ஒரு பாடம்! என்னே ஒரு பாடம்! ஓ, என்னே பிரயாணத்தின் இக்கட்டத்தில் நாம் எங்கே நின்று*

*கொண்டிருக்கின்றோம்!* **இப்பொழுது நாம் எங்கேயிருக்கின்றோம் என்பதை கவனி, ஆம், ஐயா, மூன்றாம் இழுப்பில் சரியாக கர்த்தருடைய வருகையின் வாசற்படியில் நாம் நின்று கொண்டிருக்கிறோம்.**

**முறையிடுகிறது என்ன? சொல்!, ஜூன் 14, 1963, பத்தி எண் 232**

*தேவனுடைய வார்த்தை நிறைவேறி விட்டது. நாம் தேவனுடைய வருகைக்கு ஆயத்தமாயுள்ளோம்.*

**சிறந்த வேலைப்பாடு, ஜூலை 5, 1964, , பத்தி எண் 199**

*பிதாவாகிய தேவனே, இந்த சிறு சபைக் கட்டிடத்தை நாங்கள் அந்த மூலையில் பிரதிஷ்டை செய்த போது, "கர்த்தராகிய இயேசுவே, நீர் இரகசியமாக வருகையில் ஆகாயத்தை உடைத்து, வந்து, சபை வேகமாக செல்லும் வரைக்கும் இது நிலைத்திருந்து ஜனங்கள் இதில் காணப்படட்டும்" என்று ஜெபித்தோம்.*

**இயேசுவின் பட்சம் சேர்ந்திருத்தல், ஜூன் 1, 1962, பத்தி எண் 280**

இப்பூமிக்குரிய சரீரம் இவ்வுலகத்திற்கு கொண்டு வரப்படும் போது அதற்காக ஒரு ஆவிக்குரிய சரீரம் ஆயத்தமாயுள்ளது. உடனே... ஓ, அல்லேலூயா! "பூமிக்குரிய கூடாரமாகிய இந்த நம்முடைய வீடு அழிந்து போனாலும் மேலே ஒன்று காத்திருக்கிறது." இந்த சரீரத்தை விட்டு நாம் வெளியே சென்றதும் அந்த சரீரத்துக்குள் நாம் நுழைந்து விடுகிறோம். அந்த சரீரத்துக்கு குளிர்ந்த பானம் அவசியமில்லை. அது உண்பதில்லை. அது பூமியின் மண்ணினால் உண்டாக்கப்படவில்லை. ஆயினும் அது பூமிக்குரிய சரீரத்தைப்போன்றே தத்ரூபமானதாய் மற்றவர் அதை தொட்டு உணரக்கூடியதாய் அதனுடன் கைகுலுக்குவதாய் அமைந்திருக்கும். அது மற்றவர்களை நேசிக்கும். எல்லாமே பரிபூரணமாயிருக்கும். அப்படிப்பட்ட அந்த சரீரம் மேலே காத்துக்கொண்டிருக்கிறது. ஆக மொத்தம் மூன்று சரீரங்கள் உள்ளன. அவைகளில் இது ஒன்று.

இந்த பீடத்தினருகில் தான் உங்கள் நித்திய ஜீவனை நீங்கள் தொடங்குகின்றீர்கள்.

இங்கு தான் உங்கள் நித்தியத்தை நீங்கள் ஆரம்பிக்கின்றீர்கள், ஓ, இங்கேயே உங்கள் நித்திய ஜீவனை நீங்கள் தொடங்கி விடுகின்றீர்கள். அப்பொழுது நீங்கள் மறுபடியும் பிறந்து தேவனுடைய புத்திரராகின்றீர்கள். நீங்கள் மரிக்கும்போது... மரணம் உங்களை இந்த சரீரத்தில் தாக்கி, உங்கள் இருதயத்துடிப்பு நின்று போய், இந்த ஜீவசக்கரங்கள் சுழலாமல் நின்று விடும்போது, அந்த சிறு நிழல் - நிழல்களின் நிழலாக இருந்த அது - ஒரு நொடியில் நிழலாக மாறி, பின்பு சிறு துளிகளாக மாறி, அடுத்து ஒரு ஓடையாக மாறி, அடுத்து ஒரு நதியாக மாறி, அடுத்து ஒரு கடலாக மாறிவிடுகின்றது சற்று கழிந்து நீங்கள் அக்கரையில் வானத்துக்குரிய சரீரம் என்னும் போர்வையை உடுத்தினவர்களாய் உங்கள் அன்பார்ந்தவர்களின் முன்னிலையில் நின்று கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் ஒருவரையொருவர் அடையாளம் கண்டு கொண்டு, ஒருவரை சிநேகித்து, மீண்டும் வாலிபனாகவும் வாலிபப் பெண்ணாகவும் மாறிவிடுகின்றீர்கள். அது அப்பட்டமான

உண்மை. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வருகை வரைக்கும் அது அங்கு காத்திருக்கிறது. ஒரு நாளில் அவருடைய மகிமையின் சரீரம்... கவனியுங்கள், அது வானத்துக்குரிய சரீரம், மகிமையின் சரீமல்ல, வானத்துக்குரிய சரீரம். ஒரு நாளில் அந்த வானத்துக்குரிய சரீரம் இயேசுவுடன் கூட பரலோகத்தை விட்டுப் புறப்படும்.

"நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்." தெசலோனிக்கேயர் 5-ம் அதிகாரம் இல்லை 1 தெசலோனிக்கேயர் 5-ம் அதிகாரம், இவ்விரண்டில் ஒன்று, "அன்றியும், சகோதரரே, நித்திரை யடைந்தவர்களினிமித்தம் நீங்கள் நம்பிக்கையற்றவர்களான மற்றவர்களைப் போலத் துக்கித்து அறிவில்லாதிருக்க எனக்கு மனதில்லை. இயேசுவானவர் மரித்து பின்பு எழுந்திருந்தாரென்று விசுவாசிக்கிறோமே, அப்படியே இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்களையும் தேவன் அவரோட கூடக்கொண்டு வருவார். கர்த்தருடைய வருகையை முன்னிட்டு நாங்கள் உங்களுக்குச் சொல்லுகிறதாவது:

*கர்த்தருடைய வருகை மட்டும் உயிரோடிருக்கும் நாம் நித்திரையடைந்தவர்களுக்கு முந்திக் கொள்வதில்லை.' (நித்திரையடைந்தவர்களை தடை செய்வதில்லை என்பதே சரியான வார்த்தை.) ஏனெனில் கர்த்தருடைய எக்காளம் தொனிக்கும். அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். இந்த வானத்துக்குரிய சரீரங்கள் கீழே இறங்கி வந்து, பூமிக்குரிய மகிமையின் சரீரங்களைத் தரித்துக்கொள்ளும். பின்பு உயிரோடிருக்கும் நாமும் ஒரு இமைப்பொழுதில் மறுரூபமாகி, அவர்களோட கூட ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு, கர்த்தரை ஆகாயத்தில் சந்திப்போம்.*

**புத்திரசுவிகாரம் - பாகம் –2, பத்தி எண் 69–71 வெளிப்படுத்தப்பட்ட தேவபுத்திரர், மே 18, 1960 புதன் மாலை**

*நான் அங்கே நின்றாக வேண்டும். சமீபத்தில்... தேவன் எனக்கு கொடுத்த அந்த மகத்தான ஸ்தலத்திற்கு என்னை*

எடுத்துச்செல்லுதலில், நான் காண்கையில், நான் அந்த ஜனங்களோடு நிற்க வேண்டியிருந்தது. நான் அவர்களுக்காக பொறுப்புள்ளவனாக இருப்பேன். இலட்சக்கணக்கான மக்கள் அங்கே நின்று கொண்டிருந்தார்கள். "அவர்கள் யாவரும் பிரான்ஹாம் குடும்பத்தைச் சேர்ந்தவர்களா?" என்று நான் கேட்டேன்.

"இல்லை, அவர்கள் உன் ஊழியத்தில் ஆதாயப்படுத்தப்பட்டவர்கள்" என்று பதில் வந்தது.

"நான் இயேசுவைக் காணவேண்டும்" என்று நான் கேட்டேன்.

"இல்லை, இன்னமும் சமயம் வரவில்லை. அவர் வருவதற்கு முன்பாக ஒரு சமயம் உண்டாயிருக்கும் ஆனால் அவர் முதலில் உன்னிடம் வந்து, நீ பிரசங்கித்த வார்த்தையின்படியே நியாயந்தீர்க்கப் படுவாய். அவர்கள் அதன் பேரில்தான் இளைப்பாறிக் கொண்டு இருக்கிறார்கள்" என்று அவர் கூறினார்.

*"எல்லோரும் அங்கே நின்றாக வேண்டுமோ? பவுலுங்கூட அங்கே நின்றாக வேண்டுமோ?" என்று நான் கேட்டேன்.*

*"ஆம், பவுல் தான் யாருக்கு பிரசங்கித்தானோ அவர்களோடுங்கூட அவன் நின்றாக வேண்டும்" என்று அவர் கூறினார்.*

*"பவுல் பிரசங்கித்த அதே செய்தியை நானும் பிரசங்கித்தேன்." தங்கள் கரங்களையுயர்த்தி, "அதன் பேரில்தான் நாங்களும் இளைப்பாறிக் கொண்டிருக் கிறோம்" என்றார்கள். அங்கேதானே அது சரியாக இருக்கிறது. ஆம், மேலும் கூறப்பட்டது: "பின்பு நாம் யாவரும் ஒன்று சேர்ந்து புசிக்கவும் குடிக்கவும் கூடியதான ஒரு சரீரத்தை அடைய பூமிக்குத் திரும்பிப் போவோம். பின்பு முடிவில்லாத யுகாயுகமாய் ஒன்று சேர்ந்து வாழ்வோம்" என்று. அதுவே கர்த்தருடைய வருகையாயிருக்கிறது. அது சரிதான்.*

**பத்து கன்னிகைகள், டிசம்பர் 11, 1960 காலை,**
**பத்தி எண் 213–217**

★★★★★